**13.02.2025**

**MCOP.No. 12/2019**

**ம.சா.1 : கூத்தபிள்ளை**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) விபத்து சமயத்தில் நான் நெல் அறுக்கும் இயந்திரத்தில் பயணம் செய்தேன். நெல் அறுக்கும் இயந்திரத்தில் ஓட்டுநர் தவிர இரண்டு பேர் செல்ல வசதியுள்ளதா என்றால் 3 பேர் வரை செல்லாம். நான் சொல்வது தவறு என்றும் நெல் அறுக்கும் இயந்திரத்தில் ஓட்டுநர் ஒருவர் தான் செல்ல விதி உள்ளதால் என்றால் சரியல்ல. பொலிரோ வாகனம் 10 மீ தூரத்தில் பார்த்தேன். நெல் அறுக்கும் இயந்திரத்தில் பொலிரோ வாகனம் மோதிய உடன் வண்டியில் கம்பியை பிடித்து கொண்டிருந்த நான் கீழே விழுந்துவிட்டேன்.

2) கம்பியை பிடித்து கொண்டியிருந்த நான் வண்டி வாகனம் மோதிய உடன் கம்பியை பிடிக்க முடியாமல் நிலைதவறி கீழே விழுந்துவிட்டேன். நெல் அறுக்கும் இயந்திரத்தில் ஒருவர் மட்டும் தான் செல்ல முடியும் என்றும், மேற்படி விபத்தில் நான் கீழே விழுந்ததற்கு நான் தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்து குறித்து பொலிரோ மீது தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதா என்றால் தெரியாது.

3) ஓட்டுநருக்கு அடிப்படதா என்றால் விபத்தில் நான் அவர் மீது மோதியதில் என் தாடை மோதி அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. மகேந்திரா வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்று தெரியாது. மேற்படி மகேந்திரா வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் 1ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ-7ல் தவறு இருந்தால் அதை திருத்திக்கொள்ளலாம் என்றால் சரிதான்.

4) விபத்து சமயத்தில் நான் அஜாகிரதையாக பயணம் செய்த காரணத்தினால் விபத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு எந்த வித உடல் ஊனமோ ஏற்படவில்லை என்றும், விபத்தால் ஏற்பட்ட காயம் சரியாகிவிட்டது என்றும், அதனால் எனக்கு எவ்வித வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றும், அதனால் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகமானது என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S Date: 2025.02.13 18:42:50 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**